செ.வெ. எண் : 760

நாள் : 27.10.2009

செய்தி வெளியீடு

தென்னை –பனைத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஆய்வு செய்ய உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் திரு.கே.பி. சிவசுப்ரமணியம் அவர்களின் தலைமையிலான குழுவின் அறிவிப்பு

தமிழகத்தில் உள்ள தென்னை–பனைத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை விரிவாக ஆய்வு செய்து, சட்டப்படி ஆவன செய்வதற்கு தமிழக அரசால் நியமிக்கப்பட்டுள்ள நீதியரசர் திரு.கே.பி. சிவசுப்ரமணியம் அவர்களின் தலைமையிலான குழு, வரப்பெற்றுள்ள மனுக்களின் பரிசீலனைக்குப் பின் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள தென்னை – பனைத் தொழிலாளர்களின் கருத்துக்களை நேரடியாக கேட்டறிய மாநிலத்தில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளது.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 31.10.2009 அன்று காலை 10.00 மணியளவில் கூட்டம் நடைபெறும். இக்கூட்டத்தில் தென்னை–பனைத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை வெளிப்படுத்த விரும்புவோர் கலந்து கொள்ளலாம். இக்கூட்டத்தில் தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், அரியலூர், பெரம்பலூர், மற்றும் திருச்சி மாவட்டங்களிலுள்ள தென்னை–பனைத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை குழு கேட்டு ஆராயும். மற்ற மாவட்டங்களுக்கான பயண விவரம் விரைவில் அறிவிக்கப்படும்.

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

(signature) 27/10/09

த. சந்திரசேகரன்,
உறுப்பினர் செயலர்/
நீதியரசர் சிவசுப்ரமணியம் குழு
சென்னை. 108.